**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE SHOLINGANALLUR**

**OS. No.841/*2024***

Deposition of Witness for Plaintiff/Defendant Solemnly Affirmed by Tmt. S.Ramalakshmi Assistant in accordance with the provisions of Act X of 1873 on 11.07.2025

| | | | |
|---|---|---|---|
| Name | Baskar | Religion | Hindu |
| Father Name | | Age | |
| Village | | Calling | |
| Taluk | | | DW1 |

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் மீன் பிடி தொழில் செய்து வருகிறேன். இவ் வழக்கு எனது தந்தை வாங்கிய இடம் சம்பந்தமான வழக்கு எனது தந்தை தா.வா சொத்தை விற்கவில்லை வலை வாங்குவதற்காக கொடுத்ததை இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்கை பற்றி எனக்கு தெரியும். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப் பற்றி தெரியுமா என்றால் எனது தந்தை இடத்தை விற்பனை செய்ததாக வழக்கு தாக்கல் செய்தனர் ஆனால் அந்த இடத்தை அவர் விற்பனை செய்யவில்லை.

2. இவ் வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞர் தாக்கல் செய்த வழக்கு ஆவணங்களை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மீன் வலை வாங்கியது சம்பந்தமாக எந்த விவரமும் இவ்வழக்கில் இல்லை என்றாலும் நான் தற்போது பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நான் சொத்து

சம்பந்தமாக தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ஆனால் இவ்வழக்கு எனது தாயார் சகோதர சகோதரிகள் எழுதி வைத்த செட்டில்மென்ட் ஆவணம் செல்லாது என்பதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியும். எனக்கும் வாதிக்கும் என்னென்ன வழக்குகள் எந்தெந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் முதலில் ஆலந்தூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அங்கிருந்து இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

3. இந்த இரண்டு வழக்கை தவிர வேறு ஏதேனும் வழக்கு எங்களுக்குள் இருந்ததா என்றால் வேறு எந்த வழக்கும் இல்லை. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்தல பிரமாண வாக்குமூலத்துடன் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.நான் தாக்கல் செய்துள்ள எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் அது ஆங்கிலத்தில் உள்ளது நான் ஐந்தாம் வகுப்பு தான் படித்துள்ளேன் எனது வீட்டில் உள்ளவர்களுக்கு தான் தெரியும் எனக்கு தெரியாது.

4. அதில் உள்ளதை தமிழில் மொழி பெயர்த்து எனக்கு கூறினார்களா என்றால் கூறவில்லை. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் உள்ளதால் அதை தமிழில் விளக்கி கூறியவாறு எந்த கூற்றுகளும் இல்லாததால் நான் தாக்கல் செய்த முதன்மை பிரமாணவாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

5. பி.சா.ஆ 15 என்னிடம் காட்டப்படும் அந்த ஆவணம் என்ன ஆவணம் என்று கேட்டால் என்னால் சொல்ல முடியாது என்று சொன்னால் அது ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு அதை படிக்கத் தெரியாது அதனால எனக்கு அதைப் பற்றி சொல்ல முடியாது.

என்ன காரணத்திற்காக இந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்பதையும் என்னால் சொல்ல முடியாது என்று சொன்னால் எனது அப்பாவின் வழக்கு என்ற காரணத்திற்காக இந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் சரவணன் நவீன் மற்றும் சார் பதிவாளர் எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் ஆனால் எனக்கு அது என்ன ஆவணம் என்பதை பற்றி சொல்லத் தெரியாது என்றால் சரியல்ல எனக்கு தெரியும்.

6. வழக்கு சொத்தின் சர்வே எண். 13/6 ஏ. வடக்கு 34 தெற்கு 33 வ டக்கு தெற்கு 64 அடி. தெற்குபக்கம் ரோடு கிழக்கு பக்கம் கிருஷ்ணமூர்த்தி நிலம், வடக்கு பக்கம் சந்திரகாந்தன் நிலம், மேற்கு பக்கம் சந்திரகாந்தன் வழிநிலம். சந்திரகாந்தன் நிலத்தை யாராவது வாங்கியுள்ளார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.எனது முதன்மை பிரமாணம் வாக்கு மூலத்தில் பத்தி ஐந்தில் மூணாவது பக்கம் ஐந்தாவது பத்தியில் அதைப்பற்றி குறிப்பிட்டு சொல்லிவிட்டு தற்போது தெரியாது என்று பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் தற்போது நவீன் என்பவர் உள்ளார்.

7. இந் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 751/2024 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் அது என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் இருக்கலாம்.இந்த வழக்கை நான் வாதிக்கு எதிராக வழக்கு சொத்து சம்பந்தமாக 1981 இல் எனது தந்தை வாங்கிய சொத்தை மீன்பிடிப்பதற்கு வலை வாங்குவதற்காக பணம் பெறுவதற்காகவாதியிடம் அவ்வப்போது வழக்கு சொத்தின் அசல் ஆவணத்தை கொடுத்து பணத்தை கொடுத்து மீட்பது வழக்கம் அதுபோல் 1994 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டு வாங்கப்பட்டது அதன் பின்பு 2012 ஆம் ஆண்டு எனது தந்தை

இறந்து விட்டார் அதுவரை வாதிகள் அந்த வழக்கு சொத்து பக்கம் வரவில்லை எங்கள் குடும்பங்களுக்கிடையே செட்டில்மெண்ட் செய்த பொழுது அவர்கள் வந்து பிரச்சனை செய்து என்னை காவல் நிலையம் அழைத்துச் சென்று இரவு வரை அங்கு அமர வைத்து அனுப்பினார் அதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. நான் சொன் னவிவரங்களை எனது பிராதில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டேன்.என்ன பரிகாரத்துக்காக மேற்சொன்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது எங்களுடைய இடம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் .இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த தகவலும் தெரியாது என்றாலும் எந்த கேள்வி கேட்டாலும் எனது தந்தையின் நிலம் என்று பதில் அளிக்கிறேன் என்றாலும் நீதிமன்றத்தில் பொய்யான தகவலுடன் வழக்கு தாக்கல் செய்து நிலத்தை அபகரிப்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. வழக்கு சொத்தில் இந்த வருடம் எத்தனை முறை சென்று வந்தேன் என்று சொன்னால் நான் அங்கு செல்லவில்லை அங்கு தான் இவர்கள் வீடு கட்டியுள்ளார்களே நான் எப்படி செல்வது. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்வதற்கு நீதிமன்ற ஆணையர் சென்றபோது அவருடன் சென்றேனா என்றால் சென்றேன். நஞ்சுண்டான் தெரு பட்டா நிலத்தில் உள்ளதா அல்லது அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ளதா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை எனது தந்தை விலைக்கு வாங்கிய பின்பு இவ்வழக்கின் வாதிக்கு விற்பனை செய்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

10. தாவா சொத்தில் வாதி அரசாங்கத்திடம் உரிய அனுமதி பெற்று அந்த சொத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.எனது தரப்பில்

பதினெட்டு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அந்த ஆவணத்தில் எந்த ஆவணத்திலும் நான் தாவாசத்தில் சுவாதீனத்தில் இருந்ததை நிரூபிக்க எதுவும்தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வரிகட்டி உள்ளேன் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். இந்த ஆண்டும் நான் வரி செலுத்தியு ள்ளேன். நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் ஆனால் நான் சுவாதீனத்திலிருந்து ஆதரவாக எந்த ஆணவம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல 2014 ஆம் ஆண்டு வரை நான் சுவாதினத்தில் இருந்தேன் அதன் பின்பு என்னை சுவாதினத்தில் இருந்து அகற்றிவிட்டு நீங்கள் சுவாதினத்தில் உள்ளீர்கள்.

11. பிசா ஆ 10-ன் அளவு 2.50 ஏர்ஸ் மற்றும் 13ன் அளவு 0.60 ஏர்ஸ் இரண்டு பட்டாக்களிலும் வெவ்வேறு அளவுகள் உள்ளதால் இவ்வழக்குக்காக நானாக ஜோடிக்கப் பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. 2014 க்கு பின்பு எனது பட்டாவை உடைத்து இவர்கள் பெயரில் பட்டாவை வாங்கியுள்ளதால் எனது பட்டாவில் உள்ள அளவுகள் குறைய தான் செய்யும். நாங்கள் சகோதர சகோதரிகள் தனித்தனியாக தான் வசித்து வந்தோம். வாதி கிரையம் பெற்ற ஆவணத்தில் எனது சகோதரர் கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

12. தா.வா. சொத்தை எனது தந்தை வாதிக்கு விற்பனை செய்து விட்டார் என்றாலும் வாதி இடத்தை வாங்கி தேதியிலிருந்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல 2014 ஆம் ஆண்டில் இருந்து தான் வாதிகள் சுவாதீனத்தில் இருந்து வருகின்றனர். எனது பெயரில் உள்ள பட்டாவும் இந்த வழக்கு சொத்திற்க்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் சாட்சி அளித்தபோது வழக்கு சொத்தின் அளவுகளும் எனது பட்டாவில் உள்ள அளவுகளும் வெவ்வேறாக

உள்ளது அது இரண்டும் சரியாக உள்ளதா என்றால் எனது பேரில் உள்ள பொழுது சரியாக தான் இருந்தது இவர்கள் பத்திரப்பதிவு செய்த பின்பு அதை உடைத்து பட்டா அவர்கள் பெயரை மாற்றி பின்பு தான் அந்த அளவுகள் வெவ்வேறாக மாறியது.

13. தற்பொழுது இவ்வழக்கு சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்று சொன்னால் எனது பெயரிலும் உள்ளது.வழக்கு சொத்தின் பட்டா என் பேரிலும் வாதி பெயரிலும் உள்ளது என்று சொன்னால்வாதி பேரில் பட்டா உள்ளதா என்று எனக்கு தெரியாது எனது பெயரில் பட்டா உள்ளது. வழக்கு சொத்தின் இரண்டு பட்டாக்களில் வாதிக்கு கொடுக்கப்பட்ட பட்டாவை படி வாதி சுவாதீனத்தில் உள்ளார் என்றும் எனக்கு கொடுக்கப்பட்ட பட்டா தெருவில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அது வருவாய்த்துறையினரை தான் கேட்க வேண்டும் .

14. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ 14 வாதி பெயரில் உள்ள பட்டா 5.80 ஏர்ஸ் உள்ளது. அதில்சர்வே எண் 13 என்று குறிப்பிட்டுள்ளது. உட்பிரிவில் 13 பி, 12 பி என்று குறிப்பிட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பிசா ஆ 10 மற்றும் பிசா ஆ 2 இல்எனது தந்தை பெயரில் உள்ளது 2.50 ஏர்ஸ் என்று உள்ளது. காட்டப்படும் வாசாஆ 14 ஆவணத்தில் வாதி எனது தந்தை இடம் இருந்து வாங்கப்பட்ட சொத்திற்க்கும் சந்திரகாந்தனின் வாங்கப்பட்ட சொத்தையும் சேர்த்து ஒரே பட்டாவாக பெறப்பட்டது என்றால்சரியல்ல.

15. சந்திரகாந்தனிடம் இருந்து வாங்கியது பற்றி எனக்கு தெரியாது எனது தந்தையிடம் எந்த சொத்தும் வாங்கவில்லை. எனது தந்தை தாவாசத்தை வாங்கிய பொழுது 2.50 ஏர்ஸ் அதை வாதிக்கு 1.90 விற்பனை செய்தார் என்றும் மீதி உள்ள 0.60 ஏர்ஸ் நிலத்திற்கு தான் எனது பெயரில் பட்டா உள்ளது என்று சொன்னால் சரியல்ல எனது தந்தை யாருக்கும் சொத்தை விற்பனை செய்யவில்லை.வாதி எனது தந்தையிடம் இருந்து

சொத்தை வாங்கி விட்டார் என்றும் மீதி உள்ள ரோட்டுக்கு உண்டான பட்டாவை வைத்துக் கொண்டு தாவாசொத்தை வாதியிடம் இருந்து அபகரிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

16. நீதிமன்றத்தில் சொத்தை அபகரிக்க வேண்டும் என்று மட்டும் வழக்கு தகவல் செய்யாமல் பட்டா எனது பெயரில் உள்ள காரணத்திற்காக வாதியை அளக்களிக் க வேண்டும் என்ற வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.வாதி சொத்தை எழுதி வாங்குவது வாங்கியது செல்லாது என்று ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதி சொத்தை வாங்கவில்லை என்று தான் கூறுகிறேன் அதனால் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. நான் வாதிக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கில் தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லாததால் அந்த வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**Sd/- M.N. Rajanandhivarmasiva,**
**District Munsif cum**
**Judicial Magistrate,**
**Sholinganallur.**